தினமணி

20.01.2024

# துணை மேயர் வீட்டின் மீது தாக்குதல்: காவல் ஆணையரிடம் புகார்

**மதுரை, ஜன. 19:** மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் வீடு மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டு நடவடிக்கைக் குழு சார்பில் காவல் ஆணையரிடம் மனு அளிக்கப்பட்டது.

இதுதொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மக்கள் கண்காணிப்பகம், சோகோ அறக்கட்டளை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் அடங்கிய கூட்டு நடவடிக்கைக் குழுவின் சார்பில், மாநகரக் காவல் ஆணையர் ஜெ.லோகநாதனிடம் வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்ட மனு:

மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜனின் வீடு, அலுவலகம் மீது கடந்த 9-ஆம் தேதி தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தகைய செயலில் ஈடுபட்டவர்கள் மீது உரிய சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்து, குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும். துணை மேயர் நாகராஜனுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்.

தமிழகத்தில் போதைப் பொருள்களை மறைமுகமாக விற்பனை செய்யும் கும்பலை முற்றிலுமாக ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் கண்காணிப்பகம் ஹென்றி திபேன், சோகோ அறக்கட்டளை வழக்குரைஞர் செல்வகோமதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகி காளிதாஸ், பெண்கள் எழுச்சி இயக்கம் மகாலட்சுமி உள்பட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.